Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.107/2025

Dated 21-01-2026
Deposition of witness for : PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | வயது | : | 38 |
| தந்தை பெயர் | : | ரஜேந்திரன் | தாலுக்கா | : | பூதலூர் |
| கிராமம் | : | திருமலைசமுத்திரம் | தொழில் | : | கூலி வேலை |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

All **Accused present**

Ld. D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். இறந்துபோன ராஜேந்திரன் என் தகப்பனார்.

2) ஆஜர் எதிரிகளை தெரியாது. என் அப்பா திருச்சி - தஞ்சாவூர் மெயின்ரோட்டில் உள்ள ஊசி கம்பெனியில் வாட்ச்மேனாக பணிபுரிந்து வந்தார். அ.சா.1 ஐ தெரியும். அவருடன் அ.சா.1

மற்றும் இரண்டு நபர்கள் சேர்ந்து வாட்ச்மேனாக வேலை செய்தார்கள். முன் பக்க கேட்டை பூட்டிவிட்டு ஊசிகம்பெனி வெளியில் உட்கார்ந்து உள்ளார்கள். அப்போது பின்பக்கமாக 4 பேர் வந்து என் அப்பாவை அசிங்கமாக திட்டி கட்டையால் தலையில் அடித்து உள்ளார்கள். அப்போது என் அப்பாவை அடித்தபோது உடன் இருந்த வாட்ச் மேன் கலியபெருமாள் அவர்களை கேட்டபோது அவரையும் அடித்து உள்ளார்கள். சத்தம் கேட்டவுடன் பக்கத்து கம்பெனியில் இருந்த காசி, இளங்கோவன் ஆகியோர் வந்து பார்த்தபோது என் அப்பா மயக்கநிலையில் கிடந்துள்ளார்.

3)உடனே என்அப்பாவை 108 மூலம் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சேர்த்தார்கள். நான் போய் மருத்துவமனையில் போய் பார்த்தபோது என் தந்தை சுயநினைவு இல்லாமல் இருந்தார். 30.6.2018 வரை சிகிச்சையில் இருந்த என் அப்பா இரவு 1 மணிக்கு இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள்.

4) போலிசார் இது பற்றி என்னை விசாரித்தார்கள். நடந்த விபரத்தை சொன்னேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

/உண்மை நகல்/

ஒம்/-P. வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்